**பாலு சரவண சர்மா**

*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com


# குரு கிரக பெயர்ச்சி (வாக்கியப்படி) - ஓர் விளக்கம்

ஞாயிறு 5 கார்த்திகை, விக்ருதி 21.11.2010

குரு கிரகம் வாக்கிய கணித அடிப்படையில் 21.11.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு இந்திய நேரப்படி 11.10 மணி அளவில் அன்றைய கடக லக்ன நேரத்தில் கும்ப ராசியில் இருந்து மீன ராசியில் பிரவேசிக்கிறார். இதன் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள கோவில்களில் குரு பெயர்ச்சி பூஜை நடத்தப்படுகிறது.




வாக்கியப்படி குரு கிரகம் 8.5.2011தேதி வரை மீனத்தில் நேர்கதியில் இருப்பார்.

கலிசுத்த தினம் 1867057 (கலியுகாதி 5111) குரு சாரம்

21.11.2010 காலை 6 மணி குரு நிலை 329° 59′ 23″ பூரட்டதி 3 கும்ப ராசி

22.11.2010 காலை 6 மணி குரு நிலை 330° 00′ 15″ பூரட்டாதி 4 மீன ராசி

**குரு நின்ற பலன் :**

- சந்திரன் நின்ற இராசிக்கு 2,5,7,9,11ல் குரு இருப்பின் நன்று
- குருவின் சொந்த வீடு தனூர், மீனம்
- குருவிற்கு பகை வீடுகள் ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம்
- குருவிற்கு நட்பு வீடுகள் மேஷம், கடகம், சிம்மம், விருச்சிகம்

**நல்ல பலன் பெறும் இராசிகள்:**

கடகம், கன்னி, விருச்சிகம், கும்பம்

**சுமாரான பலன் பெறும் இராசிகள்:**

மேஷம், ரிஷபம், மிதுனம், துலாம், மகரம்,

**குருபலன் கிடைக்காத இராசிகள்:**

மீனம், தனூர், சிம்மம். (இவை குருவின் சொந்த வீடு மற்றும் நட்பு வீடு எனவே பாதிப்பு சற்று குறைவாக இருக்கும்

**பாதிப்புக்குள்ளான இராசிக்காரர்கள் செய்ய வேண்டிய பரிகாரம்**

- மஞ்சள் நிற புது ஆடையை முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியவர்களுக்கு தானம் செய்யலாம்.
- மூக்கடலையை சுண்டல் செய்து தானம் செய்யவும் மாறாக மாலையாக சாற்ற வேண்டாம்
- நவக்கிரக கோளறு பதிகத்தை சிவன் சன்னதியில் அமர்ந்து மவுனமாக படிக்கலாம்
- உயிரியல் பூங்காவில் உள்ள யானைக்கு (குரு கிரகத்தின் வாகனம்) ஒருநாள் உணவிற்கு நிதி உதவி செய்யலாம்

## வாக்கிய முறைக்கும் திருக்கணித முறைக்கும் உள்ள வேறுபாடு (கணித பூர்வமான தகவல்)



...स्य — 'रात्रिनिर्वासरुद्धांशको-रागज्ञः' इति शोध्यम् । 'विष्णुर्यज्ञज-...ः', 'गुणनामोत्सवै-र्धीविधा', 'शोकधी[1]विशिखैः-सत्त्ववित्' इति मण्डल-... । 'तोटकैः' इति परिवृत्तिवाक्यम् ॥ १८B ॥

गुरोः

| वाक्यम् | दिनानि नाडिकाः | ध्रुवः | कलाः |
|---|---|---|---|
| [1]सत्यं[2]शूरवन[3]समयैः[4] | (15,70,425 - 17) | पितरः[5] | (—261) |
| [6]सरणिस्वदेवोत्सवैः[7] | ( 4,74,875 - 27) | अनेनाः[8] | ( +0 ) |
| [9]नर्मदावर्तमालकैः | ( 1,35,648 - 50) | धनानि | ( —9 ) |
| सत्योदय[10]निमित्तैः | ( 65,018 - 17) | बलाढ्या | (+188) |
| सङ्कीर्णकुक्कनीलैः | ( 80,815 - 17) | कथाज्ञः | ( —71) |
| दैवैद्युगुणि[11]पुत्रैः | ( 21,589 - 48) | धीकृतः[12] | (—619) |
| विश्वोत्साह[13]गर्वैः | ( 4,887 44) | भूसुराः[14] | (+274) |

...ः धूळिगैः[15] (899)[16] १८-C

குரு கிரக நிலை கணிதம் (Jupiter Planet position ephemeris )

(a)Sodhya given is 1570425.283333, corresponding to JD[TDT] = 2158890.83552083:21 September 1198 12:48 LMT. Dhruva is (—)261' and Jupiter $180^0$ - $4^021'$+Correction(=+22') = $175^039'$+22' = $176^001'$. Ayanamsa is $11^033'$. Modern astronomy gives Jupiter = $185^028'45''$ and Sun = $184^044'$. Sidereal longitude of Jupiter will be $173^056'$.

(b) The first Mandala (முழு சுற்று) given (474875.45 days) is more than 1300 years. Considering the 4th Mandala given i.e., 30315.28333 days, we arrive at: Kalidina = 1600740.5666: Jupiter as per Vakyakarana will be 180 + [-261'-71'] + Correction (+28')= $174^056'$. Ayanamsa = $12^056'$. By modern algorithms JD [TDT] = 2189206.11580787: Saturday, 20 September 1281.Jupiter = $185^031'51''$ and Sun = $184^054'54''$. Sidereal value of Jupiter will be $172^036'$.

← படம்: "வாக்கிய கரணம்" நூலில் இருந்து குருவின் சார கணணம்

குறிப்புகள்: Sodhya : வாக்கிய கணண சூத்திரம், JD: ஜுலியன் தேதி, [TDT]: பிரதேச நேரம், LMT: உள்ளூர் நேரம், Sidereal நிராயண முறை என கொள்ளவும், Kalidina கலியுகம் பிறந்தது முதல் இன்று வரை நாட்கள்.

## திருக்கணித குருபெயர்ச்சி

■ திருக்கணிதப்படி(அறிவியல் பூர்வமாக - இந்திய அரசு வானியல் துறை புள்ளிவிபரப்படி) குரு கிரகம் 2.5.2010 அன்றே கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு பிரவேசித்து விட்டார்.
■ திருக்கணிதப்படி 8.5.2011 அன்று குரு மீனத்தில் இருந்து மேஷத்திற்கு பிரவேசிக்கிறார்
■ இந்தியா முழுவதும் பெரும்பாலும், தமிழகத்தில் சம அளவிலும் திருக்கணித முறை பயன் படுத்துவதால், தமிழகத்தில் மட்டுமே குறிப்பாக வாக்கிய முறையை பயன் படுத்தும் கோவில்களில் மட்டும் குரு பெயர்ச்சி கடைபிடிக்கப்படுகிறது
■ வழிபாடு மற்றும் பாரம்பரியம் என் கிற நிலையில் இந்த வாக்கிய முறை குருபெயர்ச்சியை வழிபடுவதில் தவறில்லை.
■ திருக்கணித முறை ஜாதகத்தை எழுதியவர்களுக்கு வாக்கிய முறை பலன் களை கூறுவது பொருத்தமற்றதாகும்.

## குரு வழிபாடு

வழிபாட்டில் 3 நிலைகள் உள்ளன, இதில் முதல் மற்றும் இரண்டாம் வகையே மிக சிறந்தது

1. ஏழை எளியோருக்கு தானம், தர்மம் செய்து மற்றவர்களின் மகழ்ச்சியில் இறைவனை காண்பது
2. முழுமனதால் நாமே இறைவனை நேரிடையாக பிரார்த்தனை செய்வது
3. பொருள் வழி (அபிஷேகம்), தூதுவர்கள் (அர்ச்சகர்) துணையுடன் வழிபாடு செய்வது

> சூரிய சித்தாந்தம் அடிப்படையில் 1.5.2010 அன் று 22.30 மணி அளவில் குரு மீன ராசியில் பிரவேசித்தார்

## குரு கிரகம் வழிபாடு - ஓர் எச்சரிக்கை

■ திருக்கோவில் வழிபாடு அடிப்படையில் குரு கிரகம் இறைவனின் **சேவகரே**
■ குரு கிரகத்தை இறைவனுக்கு சமமாகவோ அல்லது இறைவனைவிட மேலானதாக தவறாக வழிபடுதல் கூடாது.
■ சிவனை வழிபடுவதால் குரு கிரக தோஷ நிவர்த்தி பலன் கிடைக்கும்.
■ கோவிலில் மூலவர், உபமூர்த்திகளை வணங்கிய பிறகே இறுதியாக கிரகங்களை வணங்கவேண்டும் என் பது விதி
■ குரு கிரகம் வேறு தட்க்ஷிணா மூர்த்தி வேறு இரண்டையும் ஒன் றாக அல்லது சமமாக கருத வேண்டாம்.
■ சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்களில் மிகப்பெரியதாக குரு இருப்பதால் அதனை கிரகங்களின் தலைமையானதாக போற்றப்படுகிறது.
■ நவக்கிரக சன் னதிகள் கடந்த 200 ஆண்டுகளில் தான் உருவாக்கப்பட்டது
■ பழமையான எந்த கோவிலிலும் நவக்கிரக சன் னதிகள் கட்டப்படவில்லை.
■ சிற்ப சாஸ்திரத்தில் நவக்கிரக சன் னதி அமைப்பது குறித்து விரிவாக விவரிக்கப்படவில்லை.
■ இல்லம் மற்றும் கோவில்களில் நடைபெறும் பூஜைகளின் துவக்கத்தில் காலம் அனுகூலமாக இருக்கவேண்டும் என் று கிரகங்களை வழிபடுவதுதான் நவக்கிரக வழிபாடு. பின் னர் இவைகள் கோவிலுக்குள் சன் னதியாக உருவாகிவிட்டது.

## சிங்கப்பூர் மற்றும் மலேசியா

இந்தப்பகுதியில் குரு பெயர்ச்சி திங்கள் கிழமை 22.11.2010 அன் று அதிகாலை 1:40 மணி அளவில் நிகழ்வதால் சூரிய உதயத்திற்கு பின் னர் சிவன் கோவிலுக்கு சென் று வழிபாடு நடத்திடலாம்.

---





Jupiter is the largest planet in the solar system. Its diameter is 88,846 miles (142,984 kilometers), more than 11 times that of Earth, and about one-tenth that of the sun. It would take more than 1,000 Earths to fill up the volume of the giant planet. When viewed from Earth, Jupiter appears brighter than most stars. It is usually the second brightest planet -- after Venus. Jupiter is the fifth planet from the sun. Its mean (average) distance from the sun is about 483,780,000 miles (778,570,000 kilometers), more than five times Earth's distance.

Jupiter travels around the sun in a slightly elliptical (oval-shaped) orbit. The planet completes one orbit in 4,333 Earth days, or almost 12 Earth years.

**விரிவான குருபெயர்ச்சி பலன் கள்**

எனது பணிச்சுமை காரணமாகவும், தட்டச்சு செய்ய பணியாளர் வைத்து (ரூ10,000) மாத சம்பளம் தரவசதியில்லாத காரணத்தால் ஒவ்வொரு இராசிக்கும் தனியாக விரிவான குருபெயர்ச்சி மடலை என் னால் தரயியலவில்லை. மன் னிக்கவும்.

---

**பாலு சரவண சர்மா**
*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின் னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

© முழு காப்புரிமை 9.11.2010

www.prohithar.com